சந்மார்க்கபோதினி.

(நான்காம் பாகம்.)

ஹைஸ்கூல்

முதலாவது வகுப்புக்கு ஏற்றது.

372
305

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்
வித்தியாநுபாலன அச்சகம்
சென்னை.

விலை அணா 2.

சந்மார்க்க போதினி.

(நான்காம் பாகம்.)

ஹைஸ்கூல்

முதலாவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணா 2.

முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக் கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது. ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சன்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல்களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டுகின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குத் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியாசாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணா 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.
நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை.
நந்தனஹ சித்திரைமீ.

G. சுப்பிரமணியம்.
தருமபரிபாலகர்.

சந்மார்க்க போதினி.

நான்காம் பாகம்.

கடவுளுடைய திருவடிகளைப் பத்தியோடு தொழாவிடின், கல்வியால் எவ்விதப் பயனு மில்லை.

நிலையில்லாத உடம்பைப் பாதுகாப்பதை விட்டு நிலையுள்ள கடவுளைப் பத்திசெய்து பூசிக்க.

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும் தீதேயாயினும் அதுவே பெரும்பான்மையும் மரணபரியந்தம் அவனைத் தொடரும். ஆதலால் இளமையிலேயே நற் பழக்கத்தைப் பழகிக்கொள்க.

இளமையில் வருத்தப்பட்டுக் கற்றவர் பெரு மையடைவார். அப்படிக் கல்லாதவர் சிறுமை யடைவார்.

மானிடருக்குள்ளே கற்றோரும், அவரி னும், ஈகையாளரும், அவரினும் ஞானிகளும் சிறந்தவர்.

மேலோர் பிரதியுபகாரத்தை விரும்பாது அறஞ் செய்வார்.

அன்பும், பொறுமையும், வாய்மையும், தூய்மையு முண்டானால் சகல கருமங்களும் சித்திக்கும். கடவுளுடைய அருளும் வாய்க்கும்.

பொறாமை, அவா, வெகுளி, கடுஞ்சொல் இந்நான்கும் விட்டதே அறமெனப்படும்.

தன்னை அகழ்வாரை வீழாமற்றாங்கும் நிலம்போலத் தன்னை அவமதிப்பாரைப் பொறுத்தல் சிறந்த அறமாகும்.

ஒருவனை அடக்கம் தேவருலகத்தும், அடங்காமை நரகத்தும் செலுத்தும்,

பிறர் மனச்செருக்கினால், தமக்குத் தீய வற்றைச் செய்யின் தாம் தம்முடைய பொறையி னால் வெல்லவேண்டும்.

ஒருவனுக்குப் பணிவுடைமையும் இன் சொல்லுமே ஆபரணங்களாகும். அதுவன்றிக் கழுத்திலணியும் பொற்சங்கிலியும், மணிக்கட் டில் கடிகாரமும், விரலில் வயிரக்கல் மோதிர மும் ஆபரணங்கள் ஆகமாட்டா.

நல்ல உள்ளம் நல்வாழ்வுக்கு அறிகுறி.

இப்பிறப்பில் தவஞ் செய்வார் மறுபிறப்பில் வேண்டியவற்றை விரும்பியவாறே பெறுவர்.

ஒரு பொருளுமில்லாதவருக்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பது கொடையெனப்படும், மற்றவை கைமாற்றை எதிர் நோக்கியனவாகும்.

உடம்பின் தூய்மை நீராலும், மனத் தூய்மை வாய்மையாலும் அமையும்.

ஆசிரியனுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி.

செல்வர் முன் வறியார் நிற்பதுபோல ஆசிரியர் முன் மாணவர் நின்று கற்காவிடில் மேல் நிலை அடைய மாட்டார்.

கற்றறிந்தாரிடத்துள்ள வறுமையைக் காட்டிலும் கல்லாதவரிடத்துள்ள செல்வம் துன்பஞ் செய்யும்.

விலங்குகளுக்கும் மக்களுக்கும் எவ்வளவு வேற்றுமை யுண்டோ அவ்வளவு வேற்றுமை கல்லாதவருக்கும் கற்றவருக்கும் உண்டு.

கல்லாதவர் உயர்ந்த குடியிற் பிறந்தாலும், தாழ்ந்த குடியிற் பிறந்த கற்றாரளவு பெருமையடையார்.

ஒருவனுக்குப் பொருள் வருங்காலத்து முயற்சியும் அது போங்காலத்துச் சோம்பலும் உண்டாகும்.

நிலையில்லாத உடம்பு அழியுமுன்னே கடமைகளையும் தருமத்தையுஞ் செய்ய வேண்டும்.

பொய் மெய்யையும், கோபம் பொறுமையையும், பாவம் புண்ணியத்தையும் வெல்ல மாட்டா.

இன்பம் புண்ணியத்தினாலன்றிப் பாவத்தினாலுண்டாகாது.

பாதகரைப் பார்த்தலாற் பாவமும், தவத்தரைத் தரிசித்தலாற் புண்ணியமும் உண்டாகும்.

துட்டருடன் நட்புக்கொள்ளாதே, சகவாசஞ் செய்யாதே.

பாவியுடைய திரவியம் துட்டருக்கு மாத்திரம் உபயோகப்படும்.

துட்டருக்கு இடம் கொடுத்த நல்லோர் அவராலே துன்பத்தை அடைவர்.

நல்லறிவொழுக்கங்கள் இல்லாதவருடைய வேதமுதலிய சாஸ்திரவுணர்ச்சி பழிக்கப்படும்.

வஞ்சகருடைய முகமும், சொல்லும் நல்லனபோலக் காணப்பட்டாலும், அவர் மனம் மிகக் கொடியதாயிருக்கும்.

துட்டர்களிடத்துத் தமக்கு ஒரு தொழிலும் இல்லாமையால் நல்லோர் அவரை அணுகார்.

தீயவர் மிகுந்த கல்வியுடையவராய் இருந் தாலும் அவரோடு பழகுதல் ஆகாது.

தத்தம் நிலையினின்று தவறுவோர் அவ மதிக்கப்படுவர்.

ஒருவன் அடையும் பொருள்களுள் கற் புடை மனைவியை அடைதலே மேம்பட்ட தாகும்.

மனையாள் தயை, அன்பு, ஈகை, பொறுமை முதலிய நற்குணங்களை யுடையளாய் இருத்தல் வேண்டும்.

மந்திர முதலியவைகள் மெய்யென்று நம்பு வோர்க்குப் பயனைக் கொடுக்கும், நம்பாதவருக் குப் பயனைக் கொடுக்க மாட்டா.

தடாகநீர் சீதளகாலத்தில் உஷ்ணத்தை யும், உஷ்ணகாலத்தில் சீதளத்தையும் கொடுக் கும்.

தொழில் செய்வோர்க்குப் பஞ்சமும், செபஞ் செய்வோர்க்குப் பாவமும், மௌனிகளுக்குக் கலகமும், தேவர்களுக்குப் பயமும் இல்லை.

பசுக்களையும், தவத்தரையும், பெண்களையும் கொல்லுதலும், பொய் கூறுதலும் ஆகிய இவற்றால் வரும் பாவங்கள் ஒன்றுக்கொன்று நூறு மடங்கு அதிகமாம்.

துட்டமிருகங்களுக்கு வழிவிலகிப் போதல் வேண்டும். துட்டமனிதருக்கு அவர் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் நீங்கிவிடல் வேண்டும்.

இருமல் தித்திப்பினுல் அதிகரித்தலும், கசப்பினுல் அடங்குதலும் போல துட்டர் இன்சொல்லால் மிஞ்சுதலும் வன்சொல்லால் அஞ்சுதலும் உடையராவர்.

நாயகன் இல்லாமையாற் பெண்களுக்கும், பொறுமையில்லாமையினுல் தவஞ் செய்வோர்க்கும், தாயில்லாமையினுற் பிள்ளைகட்கும், பல்லில்லாமையினுல் உண்பவர்களுக்கும் இன்பமில்லை.

சரீர வருத்தத்திற்கு அஞ்சிப் பிற தொழில்களைச் செய்து பொருள் பெற்ருலும், உணவின் பொருட்டு வேளாளரிடத்துச் செல்லவேண்டியிருத்தலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும் வேளாண்மைக்கு நிகராவது ஒன்றுமில்லை.

ஒருவருக்கும் பொல்லாங்கு நினைக்கவேண்டாம். அன்பாகவே பேசவேண்டும். குழந்தைகள், வயோதிபர், மெலிந்தவர்கள், வறியவர்கள் ஆகிய யாவரையும் ஆதரிக்கவேண்டும்.

சண்டை சச்சரவு ஒருபோதும் வேண்டாம். வித்தாரமுங் கடம்பும் வேண்டாம். செத்தாரைப் போலே திரி. தனக்குப் பயன் படாத அல்லது பிறர்க்கு நன்மை பயக்காத விஷயங்களில் அனுவசியமாக வாக்குவாததில் பிரவேசியாதே.

சுயநலத்தையே பெரிதாகப் பார்க்கவேண்டாம். பரநலமே பெரிதென்று பார்த்து, உனக்குள்ள நன்மைகளை அவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

தன் உயிரைப்போல் மன்னுயிருக்கு இரங்க வேண்டும். தனக்கு விருப்பமானது பிறர்க்கும் விருப்பமாகத்தானே யிருக்குமென்றும், தனக்கு இஷ்டமில்லாதது எவருக்கும் இஷ்டமில்லாமலே யிருக்குமென்றும் எண்ணி நடத்தல் சிறந்த விதியாம்.

பெற்றோர் பேச்சைப் பொன்னாக மதிக்க வேண்டும். “தந்தைசொல் மிக்க மந்திரமில்லை” “தாய்சொல் துறந்தால் வாசகமில்லை”

குரு வாக்குக் கிணங்குதல் சீஷனுக் கழகு. சீஷனை நல்வழிப்படுத்திப் பிறர்க்கு உதவியாகும்படி செய்வதே, குருவினுடைய கருத்தென்று அறிய வேண்டும்.

எதையும் ஏற்ற காலத்தில் செய்யவேண்டும். காலஞ் செய்கிறது ஞாலஞ் செய்யாது. செய்வன திருந்தச் செய். நல்லதைச் செய்ய நித்தம் நினை. அதுவே உனக்குச் சீருஞ் சிறப்புமாம். ஆலசியம் வேலைக்கும் நல்வாழ்வுக்கும் நற்சுகத்துக்கும் விஷம்.

ஆபத்துக் காலத்தில் சென்ம விரோதிகளும் நண்பர்களாக மாறிவிடவேண்டும்.

தன் சொந்த விவகாரங்களிலோ, அயலார் விவகாரங்களிலோ, தேச விவகாரங்களிலோ சமாதானத்தை உலகில் நிலைநாட்ட, எவ்வளவு தியாகமுஞ் செய்யவேண்டும்.

தியாகத்துக்குக் கைமேல் பலன் கிடைக்க வேண்டுமென்று விரும்பினால் அதைத் தியாகமென்று சொல்வது பொருத்தமல்ல.

எல்லோரும் தத்தம் உரிமைகளை மட்டுமே வற்புறுத்துவதோடு நின்று விடுகின்றனர்; அதோடு கடமையையும் திறம்படச் செய்வார்களானால் குழப்பமோ சச்சரவோ ஏற்படாது.

பிறரது துன்பத்தைத் தனதாக ஏற்றுக்கொள்வதில் எவன் மகிழ்ச்சி அடைகிறானோ அவனே உண்மையான தொண்டன்.

தங்கள் நன்மை, உறவினர் நன்மை, நண்பர் நன்மை ஆகியவற்றைவிட, தேசநலன் மிக

மிகப் பெரிது. ஆதலின் அதற்கு உழைப்பது நம் கடமை.

தன்னைத்தானே சோதித்துக்கொள்வதால் பெருமையும், பிறரைச் சோதித்துக்கொண்டிருப்பதால் சிறுமையுந்தான் ஏற்படும்.

நேர்மையின்மையும் அன்பின்மையும் கொள்ளை இலாபமடிக்கும் மனப்பான்மையுந்தான் கட்டுப்பாடுகளையும் சட்டங்களையுங் கொண்டு வந்தன.

பழிவாங்கும் உணர்ச்சி விஷ சக்கரம்போலானது. அதனுல் எண்ணற்ற மக்களுக்கு இன்னல் விளைகின்றது.

எண்ணிய எண்ணமெல்லாம் இறப்பின் மேல் பிறப்பிற்கு வித்து.

எண்ணம் எப்படியோ அப்படியே மனிதன்; மனிதன் என்ன சிந்திக்கிருனே அப்படியே ஆகிவிடுகின்ருன்.

கெட்ட காற்று வெளியேற வேண்டுமானுல், நல்ல காற்று அங்கு வேகமாக நுழைய வேண்டும். அதேபோல் கெட்ட எண்ணம் மறைய வேண்டுமானுல் நல்ல எண்ணம் உட்புகவேண்டும்.

நல்ல எண்ணம் உட்புக வேண்டுமானல் தந்தை தாய் சொற்கேட்டு ஆசிரியர் நற்புத்தி கேட்டு சந்மார்க்க போதினி உபதேசமொழி களைக் கற்றுக் கற்றபடி ஒழுக வேண்டும். கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக.

சத்தியத்துக்குள்ள மதிப்பும் பலனும் பணத்துக்கு கிடையாது.

முயற்சி செய்வதுதான் நமது கடமை. பலன் கடவுள் கையில்.

கடமை செய்தல் என்பதும் தருமஞ்செய்தல் என்பதும் ஒரேபொருள்தான்,

நாகரிகம் என்பது மனிதனது கடமை வழியைக் காட்டுகின்ற ஒழுக்க முறையாகும்.

நாகரிகம் என்பது நமது பாரம்பரியம், கலாசாரம், சம்பிரதாயம், சமயாசாரம் முதலியவைகளை ஒட்டி உற்பத்தியாகவேண்டும். அன்னிய நாட்டு நாகரிகம் நமதுதேச சுவாத்தியம் சூழ்நிலை பாரம்பரியத்துக்கு இணங்கியதல்ல.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும் அடைதற்குக் கருவி சரீரம். ஆதலினல் மரணபரியந்தம் தங்கள் தங்கள் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் ஆவசியகம்; ஆகை

யாற் சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கு முறைகளை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே விழித்தெழுந்தால், புத்தி தெளிவடையும்; நரம்புத்துவாரத்துநீர் சுத்தியுறும்; பித்தம் சாந்தியாகும்; வாத சிலேஷ்மங்கள் தத்த நிலையைப் பொருந்தும்.

காலையிலே சிலம்பமேனும் குதிரையேற்ற மேனும் விளையாட்டேனும் கானடையேனும் செய்து கொண்டு வந்தால் சரீரம் இறுகும்; பசி உண்டாகும்; மலம் இறங்கும்.

காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ் செய்து கொண்டு வருதல் போலவே, அதி னின்று பிரியும் மலசலாதிகளை ஒழுங்காக மோசனஞ் செய்துகொண்டு வருதலும் ஆரோக் கியத்துக்கு ஏதுவாகும். நாடோறும் காலை மாலை என்னும் இரண்டு நேரத்தினும் தவரு மல் மல சல மோசனஞ் செய்யும்படி பழகிக் கொள்ளல் வேண்டும். இடைநேரத்திலே மல சல மோசனஞ் செய்ய வரினும் தடைப்படுத் தாது செய்தல்வேண்டும். மல சலங்களை அடக் கினால் நோய் உண்டாகும். மல சலம் தங்கா மல் இறங்குமாயின் வாத பித்த சிலேஷ்மங்கள்

தத்த நிலையைப் பொருந்தும். சமாக்கினி உண்டாகும். உணவு நன்றாகச் சீரணப்படும். சமாக்கினியாவது உட்கொள்ளுகின்ற அன்ன பானீய முதலியவைகளை நன்றாகத் தகிக்கும் உதராக்கினியாம்.

இயல்பாகிய துவர் உள்ள தூள் இலை கொம்பு என்பவைகளினாலே பல்லின் உள்ளேயும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும். செங்கல், மணல், கரி, பாளை, வைக்கோல் என்பவைகளினாலே பல் விளக்கலாகாது.

சரீரத்தில் உள்ள மயிர்க்கால்கள் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குக்களெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பறியும் பொருட்டு, நாடோறும் ஒழுங்காகச் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொள்ளல் வேண்டும்.

ஸ்நானத்துக்குப் பிராதக் காலமே உத்தம காலம். வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்தைப் பார்க்கிலும், தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும்.

சூரிய சந்திர கிரணம் படாத நீரும், காற்றுப்படாத நீரும், பாசி நீரும், அதிக சேறுள்ள நீரும், இலை உதிர்ந்த நீரும், புழு உள்ள நீரும்,

துர்க்கந்தமுள்ள நீரும் வியாதிகளை விளைவிக்கும், இவைகள் ஸ்நானம் பானம் சமையல் என்பவைகளுக்கு ஆகாவாம்.

ஸ்நானம்பண்ணி நெடுநேரம் ஈரத்தோடிருக்கலாகாது. உடம்பிலே ஈரஞ் சுவறினுல் குளிர் உண்டாகும். ஸ்நானம் முடிந்தவுடன் உடம்பிலே சற்றும் ஈரமில்லாமல் துடைத்துவிட்டுத் தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

மனமுயற்சியாலேனும் சரீர முயற்சியாலேனும் உடம்பு இளைத்திருக்கும் பொழுதும் போசனஞ் செய்த உடனும் ஸ்நானம் பண்ணலாகாது.

உடுக்கிற வஸ்திரங்களும் சயனிக்கிற படுக்கைகளும் சிறிதும் அழுக்கில்லாமல் சுத்தமாயிருத்தல் வேண்டும். சரீரத்தினின்றும் வெளிப்படும் அழுக்கானது வஸ்திரம் மெத்தை தலையணை முதலியவைகளில் ஒட்டிக்கொள்ளும். அவைகள் தோலோடு சம்பந்தப்பட்டால் அவைகளிலே படிந்திருக்கின்ற அழுக்கானது மயிர்க்கால்களை அடைத்து வியாதியை விளைவிக்கும். படுக்கைகள் போர்வைகளை நாடோறும் காற்றுஞ் சூரிய வெப்பமும் படும்படி போடல் வேண்டும்.

போசனம் பண்ணுமிடத்து காலக்கிரமத்தை அனுசரித்துக் கொள்ள வேண்டும். அகப்பட்ட பொழுதெல்லாம் போசனஞ் செய்யலாகாது. முன் புசித்த போசனம் முழுதுஞ் சீரணமாகி மிகப் பசி தோன்றிய பின்பு போசனஞ் செய்தல் வேண்டும். இப்படிச் செய்யாதொழிந்தால் புசித்த போசனஞ் செவ்வையாய்ச் சீரணமாகாது. பக்குவாசயத்தில் சிறிது சீரணமாய போசனம் பின்பு புசித்த போசனத்தோடு கலந்து, நோயை விளைவிக்கும்.

பிரகடன பத்திரம்.

	ரூ.	அ.	பை.
முதற்பாலபாடம்	0	3	0
இரண்டாம்பாலபாடம்	0	5	0
மூன்றாம்பாலபாடம்	0	10	0
நான்காம்பாலபாடம்	1	4	0
நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும்	1	12	0
சூடாமணி நிகண்டு 12-தொகுதியும் உரையுடன் (முதலிரண்டு தொகுதிகள் சொற்பொருளுடன்)	2	0	0
ஷை 10-தொகுதியுரை	1	4	0
ஷை 11, 12 தொகுதியுரை	0	12	0
முதற்சைவவினாவிடை	0	3	0
இரண்டாஞ்சைவவினாவிடை	0	10	0
பெரியபுராண வசனம்	2	8	0
சிதம்பரமான்மியம்	0	3	0
அபிராமியந்தாதி உரை	0	4	0
திரிகடுகவுரை	0	4	[illegible]
நீதிவெண்பாவுரை	0	[illegible]	[illegible]
நீதிநெறிவிளக்கம் மூலம்	0	2	[illegible]
ஆத்திசூடி கொன்றைவேந்தனுரை	0	2	0
நல்வழியுரை	0	2	0
நன்னெறியுரை	0	2	0
வாக்குண்டாமுரை	0	2	0

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,

வித்தியாநுபாலனயந்திரசாலை,

நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.